DEPOSITION OF WITNESS

**IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE**

**UTHIRAMERUR.**

**CC. No.8 of 2025**
**LW- 4 Examined as PW-4**

| | |
|---|---|
| Name:ராஜேஸ்வரி | Age: |
| Father Name:<br>Husband Name : கங்காதரன் | Profession: |
| Address: | |
| The Oath was administered to the witness by Mr.Siva Raj, Gr.III Bench Clerk and was solemnly affirmed by the witness in accordance with the provisions of the Oaths Act of 1969 on 07.07.2026 | |

**07.07.2026**

எதிரி ஆஜர்.

**விசாரணை தொடங்கிய நேரம் 3.10 PM**

**அ.சா.4. – முதல் விசாரணை**

நான் இல்லதரசியாக இருந்து வருகிறேன். அ.சா.1 கங்காதரன் எனது கணவர் ஆவார். நான் எனது கணவர் மற்றும் எனது மகள் தனலட்சுமி ஆகியோருடன் வீட்டில் வசித்து வருகிறேன். கடந்த 20.05.2024 ம் தேதி இரவு சுமார் 7.00 மணிக்கு நான் வீட்டிற்குள் டிவி பார்த்துக்கொண்டு இருந்தபோது எனது கணவர் எனது பேத்தி தர்ஷினி பேரன் சரண்ராஜ் ஆகியோர் திண்ணையில் உட்காந்திருந்தனர். அப்போது எங்கள் வீட்டிற்கு இரண்டு வீடுகள் தள்ளி குடியிருக்கும் நீதிமன்ற ஆஜர் எதிரி கன்னியப்பன் அங்கு வந்து மதுபோதையில் எங்கள் வீட்டு நாயை தடியால் அடிக்க முயன்றார். ஆனால் எனது பேத்திற்கு மேற்படி அடி விழுந்தது. எனது கணவர் ஆஜர் எதிரியை ஏன் இப்படி செய்கிறாய் என்று கேட்டார். அதற்கு அவர் தேவிடியா என்று திட்டினார். எனது கணவரின் இடுப்பில் தடியால் அடித்தார். பிடித்து தள்ளிவிட்டார். எனது கணவரை தர்ஷினி, சரண்ராஜ், கீதா ஆகியோர் மருத்துவமனைக்கு அழைத்து சென்றனர். சுமார் 20–25 நாட்கள் மருத்துவமனையில் எனது கணவர் சிகிச்சை பெற்றார்.

எனது கணவருக்கு எலும்பு முறிவு ஏற்பட்டதாக மருத்துவர்கள் தெரிவித்தனர். போலிசார் என்னை விசாரணை செய்யவில்லை.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

எனது கணவர் எங்கு சிகிச்சை பெற்றார் என்றால் செங்கல்பட்டு அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்றார். அவர் சுமார் 20–25 நாட்கள் மேற்படி மருத்துவமனையில் தொடர் சிகிச்சையில் இருந்து வந்தார் என்றால் சரிதான். எந்த தேதியில் எனது கணவரை மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்த்தோம் என்றால் சம்பவதன்றே சிகிச்சைக்கு சேர்த்தோம். நான் எப்போது மருத்துவமனைக்கு சென்றேன் என்றால் மறுநாள் காலை 11.00 மணியளவில் மருத்துவமனைக்கு சென்றுவிட்டு உடனே திரும்பிவிட்டேன். சாட்சி தீனதயாளன் எனது மகன் ஆவார். அவர் சம்பவதன்றும் மறுநாளும் ஊரில் இல்லை என்றால் சரிதான். எனக்கு மறு பெயர் ஏதேனும் உண்டா என்றால் எனது கணவர் புஷ்பா என அழைப்பார். எனது பெயர் ராஜேஸ்வரி என்ற விவரம் எனது கணவருக்கு தெரியுமா என்றால் தெரியும்.

சம்பவம் நடந்ததாக சொல்லும் தினத்தன்று யார் யார் இருந்தது என்றால் நான் எனது கணவர் எனது பேத்தி தர்ஷினி மற்றும் பேரன் சரண்ராஜ் ஆகியோர்கள் இருந்தார்கள். எனது கணவரை எவ்வாறு மருத்துவமனைக்கு அழைத்து சென்றார்கள் என்றால் சரியாக ஞாபகம் இல்லை. ஆட்டோவோ அல்லது காரிலோ அழைத்து சென்றார்கள். எனது கணவருக்கு சுவாச பிரச்சனை இருந்ததா என்றால் இருந்தது. அதற்காக சிகிச்சைகள் அவர் எடுத்துக்கொண்டார். எனது கணவருக்கு எங்கெங்கு காயம் ஏற்பட்டது என்றால் இடுப்பு, காலில் காயம் எத்தனை காயம் என்று எனக்கு தெரியாது. நான் திருமணமாகி எங்கு வசித்து வந்தேன் என்றால் புது வண்ணாரப்பேட்டையில் எனது கணவர் வீட்டில் வசித்து வந்தேன்.

சம்பவத்திற்கு கடந்த 1 வருடம் முன்பாக தான் இங்கு வந்தோம். சம்பவம் நடந்ததாக சொல்லும் சமையத்தில் எனக்கு சொந்தமாக வீடு இல்லை என்றால் சரிதான். எதிரியின் வீடு எனது வீட்டிற்கு எதிரிலும் இல்லை பக்கத்திலும் இல்லை என்றால் சரிதான். சிறது தொலைவில் சுடுகாட்டிற்கு செல்லும் வழியில் உள்ளது.

நான் சொன்ன தேதி நேரத்தில் நான் வீட்டில் இல்லை என்றால் சரியல்ல. நான் சொல்வதுபோல் சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்றாலும் எனது கணவருக்கு பவ்வியப்பட்டு எனது கணவர் கீழே விழுந்து ஏற்பட்ட காயத்தை வைத்து தற்போது பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. சம்பத்தை எத்தனை நபர்கள் பார்த்தார்கள் என்றால் அங்கு யாரும் இல்லை. நாங்கள் மட்டுமே இருந்தோம். எதிரி என்னுடைய கணவரை அடித்த தடியை திருப்பி எடுத்து சென்றுவிட்டாரா என்றால் இல்லை. எனது வீட்டு அருகில் அப்படியே விட்டு சென்றுவிட்டார். நான் சொல்வதுபோல் வழக்கு சம்பவமும் நடைபெறவில்லை என்றாலும், எதிரியை ஏதேனும் ஒரு வழக்கில் சிக்கவைக்க வேண்டும் என பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**விசாரணை முடிக்கப்பட்ட நேரம் 3.30 PM**

**Sd/R.கிருத்தியா,**
**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர்,**
**உத்திரமேரூர்.**